# ALP SCHOOL
# YELLAPATTY
# ACCADEMIC MASTER PLAN & ACTION PLAN
# 2025 - 2026

# PROFILE

| | | |
|---|---|---|
| Name of School | : | ALP School YELLAPATTY |
| Name of Revenue village | : | KDH |
| ward NO | : | VI |
| Name of cluster | : | vattavada |
| Name of Panchayat | : | Devikulam |
| Name of District | : | Idukki |
| Name of HM with mobile Number | : | G.K. Mariammal 8281282441 |

# ALP SCHOOL YELLAPATTY
## SCHOOL MASTER PLAN
## PLANNING COMMITTEE

| SLNO | NAME | Designation. |
|---|---|---|
| 1. | Mrs. G.K. Mariammal HM | Convenor. |
| 2. | Mr Senthilkumar member | Chairperson. |
| 3 | Mrs Palaniammal. Member | vice chairperson |
| 4 | Mrs Boopathy R LPSA | SRG convenor |
| 5 | Mr Vimalraj PTA president. | vice chairperson |
| 6 | Mr Divakaran. | Executive |
| 7 | mrs Geetha MPTA | Committee |
| 8 | Mr Kirupakaran | member. |
| 9 | Mr. Manikandan | member. |
| 10 | Mrs. Roobha | member. |

# SCHOOL DEVELOPMENT PLAN

## முன்னுரை

A L P School தேவிகுளம் கிராம பஞ்சாயத்தில் அமைந்துள்ளது. 1926 ஆம் ஆண்டு இப்பள்ளி தொடங்கப்பட்டு கேரள மாநிலம் உருவான வருடமான 1956 ல் அரசு உதவிபெறும் பள்ளியாக அங்கீகரிக்கப்பட்டது.

இப்பள்ளி எல்லப்பட்டி எஸ்டேட் VII ம் வார்டில் செயல்பட்டு வருகின்றது இங்கு எல்லப்பட்டி மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளி மூணாரிலிருந்து Top Station செல்லும் சாலை ஓரத்தில் அமைந்துள்ளது சுற்றுலா இடமாகவும் இயற்கை சூழலில் அமைந்துள்ளது.

கடந்த ஐந்து வருடம் போலவே இந்த ஆண்டும் குழந்தைகளின் எண்ணிக்கையில் மாற்றம் உள்ளது. அதை மேம்படுத்துவதற்காக PTA கூட்டம் நடத்தி பள்ளியில் அரசாங்கம்

வழங்கும் சலுகைகளையும் பெற்றோர்களுக்கு எடுத்துக் கூறி பள்ளியை மேம்படுத்த தீர்மானிக்கப்பட்டது

மாணவர்களின் கல்வித்திறன் மேம்படுவதற்கு விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் கற்றல் திருவிழா, பள்ளி ஆண்டு விழா, Art work experience youth festival போன்ற காரியங்களில் மாணவர்கள் செயல்படும் பெற்றோர்களின் முழு ஒத்துழைப்போடும் இப்பள்ளி செயல்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் ஆசிரியர்களுக்குப் பணியிடைப்பயிற்சிகள் நடைபெற்று வருகிறது ஆங்கிலத்தில் மாணவர்கள் அதிக ஆர்வமுடன் செயல்பட Hello English Programme நடத்தப்படுகிறது இவ்வாறு நம் பள்ளி மிகச் சிறப்பாக செயல்பட பெற்றோர்கள் Management panchayat, BRC SSK சார்பாக பல்வேறு உதவிகள் கிடைக்கின்றன.

மாணவர்கள் கற்றலில் பின்தங்கியிருந்தால் அவர்களுக்கு தனிக்கவனம் செலுத்தவும் அனைத்து செயல்பாடுகளிலும் பங்கு பெறவும் வாரம்

வாரம் ஒரு முறை SRG கூடி ஒவ்வொரு வகுப்பு ஆசிரியரும் தங்களின் கருத்துக்களை எடுத்துக்கூறி அதை நிவர்த்தி செய்யவும் முடிந்தது. மாணவர்களின் எழுத்து பயிற்சிக்கும் வாசிப்பு பயிற்சிக்கும் "வளரும் பாடப் புத்தகம்" சம்யுக்தனடரி குறிப்பு இவை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

COMPOUND WALL OR FENCING WITH GATE

Estate Manager, welfare மற்றும் பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் PTA, MPTA அனைவரும் ஒன்று கூடி compound wall கம்பி வேலி அமைக்க திட்டம் இடப்பட்டுள்ளது.

Computer and Internet connection

மாணவர்கள் கணினி கற்பதற்காக போதுமான கம்யூட்டர், Internent connection SSK வழங்குவதற்கான ஏற்பாடு செய்தல்.

காலை உணவு வழங்குதல்.

ஏற்கனவே அரசாங்கம் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கி வருகிறது. காலை உணவும் கொடுப்பதற்கான ஏற்பாடை அரசாங்கம் செய்தால் நன்றாக இருக்கும்

## இருப்பிட வசதி

ஏற்கனவே இருக்கக் கூடிய bench, desk போன்றவை மாற்றப்பட்டு chair, table dinning table போன்றவைManagement செய்து தர ஏற்பாடு செய்தல்.

## Inverter

மழைக் காலங்களில் போதுமான மின்சாரம் கிடைப்பதற்காகவும் வகுப்பறைகள் வெளிச்சமாக இருப்பதற்காகவும் Management செய்து தருவதற்கான ஏற்பாடு செய்துள்ளோம்.

## Stage அமைத்தல்

பள்ளியில் தின விழாக்கள். பள்ளி ஆண்டு விழா போன்றவை நடத்துவதற்கு பள்ளியில் ஒரு சிமெண்ட் Stage அமைக்க Management டையும். panchayath ம் செய்து தருதல்.

## சிமெண்ட் சாலை அமைத்தல்

பள்ளியின் நுழை வாயில் நடை பாதையை செய்து தருவதற்கும் சிறிய Water tank அமைத்துத் தருவதற்கு Panchayat உதவியை கேட்டுள்ளோம்.

## இந்த ஆண்டு நடைமுறைபடுத்தப்பட்ட செயல்பாடுகள்

### தினவிழாக்கள்

| | | |
|---|---|---|
| JUNE | 5 | சுற்றுச் சூழல் தினம் |
| JUNE | 19 | வாசிப்புத்தினம் |
| AUGUST | 15 | சுதந்திர தினம் |
| AUGUST | 27 | ஓணம் விழா |
| SEPTEMBER | 5 | ஆசிரியர் தினம் |
| OCTOBER | 2 | காந்திஜெயந்தி |
| NOVEMBER | 1. | கேரள பிறவி தினம் |
| NOVEMBER | 14 | குழந்தைகள் தினம் |
| DECEMBER | 25 | கிறிஸ்துமஸ் தினம் |
| JANUARY | 14 | பொங்கல் தினம் |
| JANUARY | 26 | குடியரசு தினம் |
| MARCH | 8 | மகளிர் தினம் |

மேற்கண்ட விழாக்கள் பள்ளியில் கொண்டாடப்பட்டு வருகிறது சில போட்டிகள் வைத்து பரிசுகளும் வழங்கப்பட்டு வருகிறது [படம் வரைதல், கதை எழுதுதல் கவிதை எழுதுதல்] பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை ஆர்வமுடன் பங்கு பெறச் செய்கின்றனர்.

## Activity 3 கதை புத்தகங்கள் வாசித்தல்.

* மாணவர்களிடம் கதைப் புத்தகங்கள் கொடுத்து கதை புத்தகத்திலிருந்து ெ ே ா ௌ போன்ற ஒலித்துணைக் குறியீடுகள் வரும் சொற்களைக் கண்டு பிடித்து வாசிக்கச் செய்தல் கதையில் வரும் கதா பாத்திரங்கள் போன்று நடிக்கச் செய்தல்.

## Activity 4 செய்தித்தாள்

* மாணவர்களுக்கு செய்தித்தாள் கொடுத்து வாசிக்கச் செய்தல். பின்னர் அதில் உள்ளூர் செய்திகள் விளையாட்டு செய்திகள், வெளிநாட்டு செய்திகள் போன்றவற்றைக் கண்டுபிடித்தல் வாசித்தல்.

## எழுத்து.

*. எல்லாக் குழந்தைகளும் பிழையின்றி எழுத வேண்டும்

## Activity 1. சொல் ஏணி அமைத்தல்.

* மாணவர்களை வட்டமாக அமரச் செய்து உயிர்மெய் எழுத்து அட்டைகளை அகர வரிசைப் படி எடுத்து அடுக்கச் செய்தல் பின்னர் சிறு சிறு சொல் உருவாக்குதல் (எ.கா) [அம்மா ஆடு. இலை ஈ. உரல்]

## Activity 2. வர்ணனை எழுதுதல்

* மாணவர்களிடம் கணினியில் / mobi / சில படங்களைக் காண்பித்து அது தொடர்பாக வர்ணனை

பள்ளியில் நடைமுறைப்படுத்தும் செயல்பாடுகள்

## வகுப்பறை நூலகங்கள்

ஒவ்வொரு வகுப்பறையிலும் நூலகங்கள் அமைத்து மாணவர்கள் வாசிக்க திட்டமிடப் பட்டது. Book Stand அமைத்து மாணவர்களின் வாசிப்பு திறனுக்கேற்ப புத்தகங்களை எடுத்து வாசிக்கவும் அதைக் கூறவும் சொல்லும் போது மாணவர்கள் அனைவரும் ஆர்வமுடன் வாசிக்கின்றனர்.

## வாசிப்பு தமிழ்

* எல்லா மாணவர்களும் வாசிப்பில் மேம்பட வேண்டும் எதிர் பார்க்கும் திறன்

## Activity 1 பாடப்புத்தகங்கள் வாசித்தல்

* மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து ஒரு குழுவினரிடம் படங்களைக் கொடுத்து அதனை மற்ற குழுவினர் படத்தைப் பார்த்து கூறுதல் சிறப்பம்சங்களை வாக்கியமாகக் கூற வாய்ப்பளித்தல்

## Activity 2. வார்த்தை விளையாட்டு

* மாணவர்களை வட்டமாக நிற்கச் செய்து நடுவில் சொல் அட்டையை வைத்தல் ஒரு மாணவன் ஒரு அட்டையை எடுத்துக் காண்பித்தல் அதனை பிற மாணவர்கள் வாசித்தல் சொல் அட்டை தொடர்புடைய சொற்களை வாக்கியமாகவும் புதிய சொற்களாகவும் உருவாக்கிக் கூறுதல்

## தொடர் எழுதச் செய்தல்

எ.கா மலை -: ஓங்கி உயர்ந்த மலைகள்

ஆறு -: வளைந்து நெளிந்து செல்லும் ஆறுகள்

## Activity 3. ஒருமை பன்மை எழுதல்

* ஆசிரியர் சொல் அட்டைகளை மேசை மீது வைத்தல் மாணவர்களை அழைத்து ஒரு அட்டையை எடுக்கச் செய்து அதற்கான ஒருமை பன்மை எழுதச் செய்தல்

எ.கா பூ - பூக்கள்

விலங்கு - விலங்குகள்

காய்கறி - காய்கறிகள்

## Activity 4 கவிதை வரிகளை பூர்த்தி செய்தல்

* மாணவர்களிடம் நான்கு வரி பாடல் கொடுத்து வாசிக்கச் செய்தல். பின்னர் மீதமுள்ள வரிகளை எதுகை மோனையுடன் சேர்த்து கவிதையை பூர்த்தி செய்து எழுதச் செய்தல்

எ.கா சின்னச் சின்ன பூக்கள் பார்
சிரிக்கும் அழகுப் பூக்கள் பார்
வண்ண வண்ண பூக்கள் பார்
வாசம் வீசும் பூக்கள் பார்

## Activity 5 கதை எழுதுதல்

* மாணவர்களிடம் சிறு குறிப்புகள் காண்பித்து கதை எழுதச் செய்தல். படக்கதையை காண்பித்து

அதனை கதை வடிவில் எழுதச் சொல்லுதல்

கதை தொடர்பான வாக்கியங்களை மாற்றிக் கொடுத்து அவற்றை சரியான முறையில் எழுதச் செய்தல் அடிக் குறிப்புகள் கொடுத்து கதை எழுதுதல் கதாபாத்திரங்கள் கொடுத்து கதை எழுதச் செய்தல்

Activity 6. புதிய சொற்கள் உருவாக்குதல்

மாணவர்களிடம் ஒரு சொல்லட்டை காண்பித்து அது முடியும் எழுத்திலிருந்து வேறொரு புதிய சொல் எழுதச் செய்தல் [எ.கா] குருவி, விருப்பு, புன்னகை இது போன்று தொடர் செயல்பாடாக எழுதச் செய்தல்

பாடல் பாடிக் காண்பித்து அதிலிருந்து ல, ள, ழ வரும் சொற்களை எழுதச் செய்தல்

* பாடலில் வரும் ஒத்த ஓசையுடைய சொற்களை எழுதச் செய்தல்

* எழுத்துக்களைக் கொடுத்து சொற் சூரியனை முழுமைப் படுத்தச் செய்தல்

கணிதம் : எண்ணறிவில் பின் தங்கிய மாணவர்களை மேம் படுத்தல்

Activity 1. பொருட்களை எண்ணுதல்

* மாணவர்களை வட்டமாக அமரச் செய்து அவர்களிடம் சிறிய குச்சிகள் கற்கள், விதைகள்

புளியமுத்துகள் போன்றவற்றைக் கொடுத்து எண்ணச் செய்தல்

* எண்களை எழுத்தால் எழுதச் சொல்லுதல்
* மாணவர்களிடம் worksheet கொடுத்து எண்களை அவற்றிற்கேற்ற படத்துடன் இணைக்கச் செய்தல்
* பொருட்களை கொடுத்து கூடுதல், குறைவு எண்களை கண்டறியச் செய்தல்
* ஒரு எண்ணைக் காண்பித்து அவற்றிற்கு முன்னால் வரும் எண் மற்றும் பின்னால் வரும் எண்களை எழுதச் செய்தல்

(Eg) 1, — 6 —

2, — 19 —

* எண்ணடுக்கு உருவாக்கச் செய்தல்

* 2, 4, ___ ___ ___
* 5, 10 ___ ___ ___
* 10, 20 ___ ___ ___

* விடுபட்ட எண்களை எழுதச் செய்தல்

[Eg] * 13, 14, 15 ___ ___ ___

* 21, 22, ___ ___ ___ ___
* 89 — 91 ___

* மாணவர்களிடம் எண் அட்டைகள் கொடுத்து எண்களை கூட்டி விடையை பொருத்தி எழுதச் செய்தல்

5 + 3

* பாடப்பு கட்டம் கொடுத்து எண்களை ஏறுவரிசையிலும் இறங்கு வரிசையிலும் எழுதச் செய்தல்

* கணித விளையாட்டு

கடைகளில் விற்கப்படும் பொருட்களை வாங்கி விளையாட்டு முறையில் எண்ணறிவைக் கற்பித்தல்


* மூன்று இலக்க எண்களின் கூட்டுத்தொகை மற்றும் வித்தியாசம் காணச் செய்தல்

* புதிர் விளையாட்டு

புதிர் கணக்கு புத்தகம் கொடுத்து அதிலுள்ள புதிர் கணக்குகளுக்கு விடை காணச் செய்தல்


* எண் சக்கரம் உபயோகித்து, கூட்டல், கழித்தல் பெருக்கல் போன்ற கணிதச் செயல்பாடுகள் செய்ய வாய்ப்பளித்தல்

* எண் சக்கரம் உருவாக்குதல்




இது போன்ற எண் சக்கரங்கள் கொடுத்து அவற்றின் கூட்டல் (+) கழித்தல் (−) பெருக்குத்தொகை (x) காணச் செய்தல்

* எண் மாலை உபயோகித்து கூட்டல் கழித்தல் செய்தல்




## EVS. சுற்றுச் சூழல் பாது காப்பின் அவசியம் பற்றி அறிதல்.

### Activity 1. வகைப்படுத்தல்

விலங்குகளின் படங்களைக் காண்பித்து அவற்றை வீட்டில் வளர்க்கும் விலங்குகள் காட்டில் வாழும் விலங்குகள் என வகைப்படுத்தச் செய்தல் இது போன்று பூக்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றின் படங்களைக் காண்பித்து அவற்றின் பெயர்களை பட்டியலிடுதல்

### Activity 2 தொங்கும் தோட்டம் அமைத்தல்

மாணவர்களிடமிருந்து விதை, வாட்டர் பாட்டில் கொண்டு வரச் செய்து பாட்டிலின் மேற்பகுதியை வெட்டி மாற்றி அவற்றில் மண் நிரப்பி அவர்கள் கொண்டு வந்த விதைகளை ஊன்றச் செய்தல் தினமும் அவற்றை உற்று நோக்கி ஒரு செடி

வரை எத்தனை நாட்கள் ஆகிறது. செடி வளர்வதற்கு சூரிய வெளிச்சம், காற்று, தண்ணீர் தேவை என்பதைக் கண்டறிந்து குறிப்பு எழுதச் செய்தல்

* இலைகள் மற்றும் விதைகளை சேகரித்து அவற்றின் பயன்பாடுகளை அறிந்து வரச் செய்தல்.

* ஆசிரியர் பலவகையான காய்கறிகளை மேசையின் மீது வைத்து ஏதாவது ஒரு காயைக் காண்பித்து செடியா? கொடியா? மரமா? கண்டுபிடித்து கூறச் செய்தல்

Activity 3 எளிய சோதனை

* விதை முளைத்தல் :-

விதைகளைக் கொண்டு வரச் செய்து அவற்றை தொட்டியில் விதைத்து விதை முளைப்பதற்கான கால அளவு மற்றும் சூரிய ஒளி, காற்று தண்ணீர் தேவை என்பதை அறிதல், தாவரங்களின் வேர்களை உற்று நோக்கி அவற்றை பட்டியலிடுதல்

* தீ எரிவதற்கு காற்று தேவை என்பதை சோதனை மூலம் அறியச் செய்தல் இது போன்ற எளிய சோதனைகளை செய்து காண்பித்தல்.

* காய்கறித் தோட்டம்

பள்ளியில் காய்கறித் தோட்டம் அமைத்தல் அதற்கான இடம் தேர்வு செய்து மண்ணை

செம்மைபடுத்தி வேலிகள் அமைத்து பலவகையான காய்கறி விதைகளை விதைத்து அவற்றை பராமரித்தல் தண்ணீர் உரம் போன்றவை போடச் செய்து அவற்றை உற்று நோக்கி அறிதல் பழ மரங்கள் நடுதல். பின்னர் மருந்துச் செடிகள் புதினா, மல்லி, சிர்பச்சிலை, துளசி போன்ற செடிகள் நடுதல்

English: making them speak and write in English.

Activity I Rhymmes.

Teacher ask the Learners to stand in a circle. Then the teacher show the rhymes chart. "baa baa ~~baa~~ black sheep .... First of all The Teacher Sing a Song Rhythemattically. Then the students are repeat the Song Fluently. The Teacher asks some questions [Eg]

* How many sheeps are there?
* How many legs are there in a sheep? etc...

Baa Baa black Sheep
have you any wool
yes sir yes sir
Three bags Full
One for my master ~~and~~
One for my dame.
and One for the Little boy
who lives down the lane.

Activity 2. Match the words and pictures

Form a circle point to anyone in the circle.

and say the name of a pet (eg) point to pupils and say 'cat' and has to make the sound of a cat and name of a food items. cat likes.

* Continues the game using dog goat, cow squirel etc.
* consolidate the name of pets and their Food in the Following tables.

| Pet | Food |
|---|---|
| Dog | Fish. |
| cat | Grass |
| goat | milk. |
| ---- | ---- |
| ---- | --- |

## Activity 3 Small stories.

Teacher narrates the story from the cap seller and the Monkey with proper voice Modulation.

Teacher asks interaction question like.

* Can you guess what will happen next?
* what will the monkeys do now?
* what is an idea of cap seller?
* Asks the learners to act the story individually and share their ideas in the group.

* Bring the masks of the capseller and the Monkey
* Introduced the masks of the capseller and Monkey to the Learner.

Activity 4. Description [Picture]

The Teacher draw the picture on a blackboard or chart. Then the Teacher ask the simple question For [Eg]

* What do you see in the picture?
* How many trees are there?
* What is the butterfly doing?
* What is the Fish live?

Activity 5. Conversation.

The Teacher and pupils between the conversation.

Teacher : what is your name?

Pupil : My name is ......

Teacher : How old are you?

Continues the conversation

Activity 6. Riddles.

Form a circle. Teacher show the picture and ask the question who am I.

* I can dance well
  My Feathers are beautiful.
  I am a national bird who am I?

* I have a long neck
  I am the tallest animal. who am I
* I look like a horse. I have stripes on my body.
  who am I.

கலை, இலக்கியம் Art போன்ற காரியங்களை தெரியாத
தெரிந்து கொள்ளவும் வரையவும் செயல்பாடுகள்
தயாரித்துக் கொடுத்தல்.

முடிவுரை:-

கடந்த வருடம் திட்டமிட்ட செயல்களில் அனைத்தும் பெற்றோர்கள் Management, panchayath BRC உதவியுடன் மிகவும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. இந்த வருடமும் சுற்றுச் சூழல் தினம் சுதந்திர தினம், ஓணவிழா குழந்தைகள் தினம், காந்திஜெயந்தி, கிறிஸ்துமஸ் பண்டிகை சிறப்பாக பள்ளியில் நடத்தப்பட்டன மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்ட பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது

YELLAPATTY AIDED L.P SCHOOL
ELLAPATTY P.O
PIN - 685615
MUNNAR-KERALA

G.K. Mariammal
HEADMISTRESS
ALPS YELLAPATTY